அசல் வழக்கு எண். 118/2014 தேதி 14-02-2024

வா.சா.2 - ராஜலிங்கம்

**3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வா.சா.1 பிச்சை முத்து எனது அத்தை மகன். நான் தான் தாவா சொத்துக்களை வாதிகளுக்கு கொடுத்தேன். அதன் சர்வே எண்கள் எனக்கு தெரியவில்லை. சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு நானும் எனது சித்தப்பா மகன்களும் கிரையம் கொடுத்தோம். எனது மனைவி சரஸ்வதி. வா.சா.1 பிச்சை முத்துவின் மனைவி கலாமணி. பிச்சை முத்து மற்றும் ராஜமாணிக்கம் வகையராவிற்கு இடையே வழக்கு நடந்த விவரம் எனக்கு தெரியாது. நான் ஏற்கனவே கலாமணி ஆதரவாக இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. அசல் வழக்கு எண். 98/2015 வழக்கில் பிச்சைமுத்து மனைவி கலாமணிக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.98/2015 வழக்கு பற்றி எனக்கு தெரியாது.

2. 3 மற்றும் 4 பிரதிவாதிகள் தந்தை கிணற்றிலிருந்து எங்கள் நிலம் வழியாக பைப் லைன் அமைத்து தண்ணீர் பாய்த்து வந்தார். சுமார் 30 ஆண்டுகளாக தண்ணீர் பாய்த்து வந்தனர். சுமார் 5 அடி ஆழத்தில் நிலத்தினுள்ளே பைப் லைன் செல்வதால் நிலத்திற்கு இடையூறு இல்லை. நான் கிரையம் கொடுத்த இடத்திற்கு வடபுறம் ராஜமாணிக்கம் மற்றும் இளங்கோ சொத்து உள்ளது. அவர்கள் கிணற்றிற்கு மேல்புறம் மண்பாதையிலிருந்து கிணறு வரை பாதை உள்ளது. அந்த பாதை 3 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு சொந்தமானது ஆகும். நான் கிரையம் கொடுக்கும் போது 15 அடி பாதை குறிப்பிட்டு எழுதவில்லை. மாமூல் வழிநடை பாதை என குறிப்பிட்டு எழுதியுள்ளேன். பொதுவாக எல்லா கிரைய ஆவணங்களிலும் மாமூல் வழிநடை பாதை என எழுதுவது வழக்கம். குறிப்பிட்டு பாதை என எழுதினால் தான் மேற்படி பாதையில் பாத்தியம் கொண்டாட முடியும் என்றால் சரியல்ல.

3. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் என்ன விவரங்கள் உள்ளன என்று எனக்கு தெரியும். சர்வே எண்.690 ல் இருந்து சர்வே எண்.691 ற்கு பாதை செல்கிறது. நான் சொல்வது போல் சர்வே எண். 691 ற்கு பாதை அமைப்பு இல்லை என்றும், வழக்கிற்காக பாதை உள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல. சர்வே எண்.691ற்கு தென்மேற்கு மூலையில் பாதை உள்ளது என்றால் சரியல்ல. 2, 3 சொத்துக்கள் தாண்டி பாதை உள்ளது. தாவா சொத்திற்கு B பட்டியல் பாதை ஒரு காலத்திலும் இல்லை என்றும், நாங்கள் மேற்படி பாதையை பயன்படுத்தியது இல்லை என்றாலும் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல்செய்த பின்னர் எனக்கும் 3 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கம் இடையே பேச்சு வார்த்தை இல்லை. 3 மற்றும் 4 பிரதிவாதிகள் மீதுள்ள மனஸ்தாபதை மனதில் வைத்து அவர்களுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-P.பாலமுருகன்

**Additional District Munsif,**
**Kulithalai.**